# ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதக் கும்மி

ஆசிரியர் :

ச. வே. வேங்கட சுப்பையர்

ஹெட் கிளார்க், துரைத்தனத்தார் கொயினா தொழிற்சாலை,
ஸிங்கோனா.

வெளியிட்டவர் :

எஸ் வி. சுப்பராம ஐயர்

போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை,
பாளையம். பவானி-வழி, ஈரோடு.

1949 [விலை 6 அணா

முதற்பதிப்பு - பிரதிகள், 500

நேஷனல் ஆர்ட் பிரஸ்
91, மௌண்ட் ரோடு
தேனாம்பேட்டை, சென்னை-18

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | சிறப்புப் பாயிரம் | iv |
| 2. | முகவுரை ... | v |
| 3. | மதிப்புரை—ஸ்வாமி சித்பவானந்தர் ... | viii |
| 4. | சிறப்புரை—ஆந்திரக்காசிப திம்மப்ப அந்தணனர் ... | ix |
| 5. | ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதக் கும்மி ... | 1-30 |
| | காப்பு ... | 1 |
| | அவதாரமும் இளம்பருவமும் ... | 1 |
| | தக்ஷிணேசுவர ஆலயம் ... | 2 |
| | தாயின் தரிசனம் ... | 4 |
| | விவாகமும் வைராக்கியமும் ... | 6 |
| | தாந்திரிக சாதனம் ... | 7 |
| | மலரை நாடிய வண்டுகள் ... | 11 |
| | பிரேமைப் பைத்தியம் ... | 14 |
| | நிர்விகற்ப சமாதி ... | 16 |
| | அநுபூதியும் சமரசமும் ... | 20 |
| | க்ஷேத்திர யாத்திரை ... | 22 |
| | பொருளெல்லாம் அன்னை வடிவம் ... | 24 |
| | திருத்தொண்டர்குழாம் ... | 27 |
| | மகாசமாதி ... | 28 |

நல்லமுறையில் திருத்தி உதவிய எனது நாடக ஆசிரியரும், கோவை உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழாசிரியரும் ஆகிய உயர்திரு ஐயா சுவாமிப்பிள்ளை அவர்களுக்கு எனது மனமார்ந்த வணக்கமும், நன்றியும் உரியனவாகுக.

உதகமண்டலம் (நீலகிரி) இராமகிருஷ்ணமடாலய நிர்வாகியும், இராமகிருஷ்ணபரமஹம்சரது சரிதத்தை அதிகார வரிசையாக வசனநடையில் எழுதியவரும் ஆகிய ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள் எனக்கு அன்புடன் அவரியற்றிய அவ்வசன புத்தகத்தின்படியே பாட்டியற்ற அநுமதியும், அப்படி இயற்றிய இந்நூலுக்கு ஒரு மதிப்புரையும் தந்துதவினர். அவருக்கு எனது ஆத்மபூர்வமான வணக்கமும் நன்றியும் செலுத்துகின்றேன். இந்நூல் வெளி வரும் விஷயமாக நன்கொடை அளித்துள்ள கனவான்களுக்கும் என் நன்றி. அவர்கள் பெயர் முதலியன அடுத்த பக்கத்தில் உள்ளன.

இந்நூல் பன்னிரண்டாண்டுகளுக்கு முன்னரே எழுதி முடிந்தபோதிலும் காலமும் இடனும் அமையாததால் இன்று இதுகாறும் வெளிவரவில்லை. இப்பொழுது இது வெளிவருவதற்குக் காரணமாக இருந்த திருவருட் செயலைப் போற்றுவதல்லது யான் செய்யும் கைம்மாறு வேறு யாதுள்ளது!

இங்ஙனம்

ச. வே. வேங்கடசுப்பன்

# சிறப்புப் பாயிரம்

(ச. கு. கணபதி ஐயர்)

அமைதரு ஞானக் கதிரினைப் பரப்பி
ஆரறி யாமையாம் இருளைக்
குமைதரச் செய்த ராமகிருஷ் ணப்பேர்
கொண்டதிண் டிறற்றவ ஞானி
இமையவெற் புஞ்சீர்க் குமரிமா முனையும்
எல்லையாக் கொண்டபா ரதத்தில்
நமையெலாம் புரக்கத் திருவவ தாரம்
நயந்தனன் இறைதிரு அருளால்.

அன்னவன் அருளால் பேதைமை யோட
அறிவருள் பெற்றனர் பல்லோர்
துன்னுபன் னூட்டும் அவன்திருப் புகழைத்
துதிப்பவர் மதிப்பவர் பலரால்
இன்னநன் ஞானி எழிற்கதை தன்னை
யாவரும் எளிதினிற் பாடி
நன்னயம் பெறவே கும்மியாச் செய்து
நாட்டினன் யாரவன் என்னின்.

பொங்கிய வெள்ளத் திரைக்கையால் அணைத்துப்
புவியினைப் பசியின்றிப் புரக்கும்
மங்கல வளஞ்சேர் காவிரி நதியின்
மாக்கரை நிலவிய சமய
சங்கிலி யூரிற் பிறந்தவன் தமிழ்ஆங்
கிலமொழி இரண்டினுஞ் சமர்த்தன்
துங்கமா வியல்சேர் வேங்கட சுப்பத்
தூயஅந் தணப்புல வோனே.

# முகவுரை

"அரிதரிது மானிடராதலரிது" என்ற மூதாட்டியின் வாக்கிற்கிணங்க மாநிலத்தில் மக்கட் பிறவியே சிறந்தது. ஏன்? நன்மை தீமைகளைப் பகுத்தறியும் ஆறுவது அறிவைப் படைத்திருப்பனாற்றான் என்பது வெளிப்படை. சிறந்த மனிதப் பிறவியை எடுத்த நாம் செய்யத் தக்கவை எவை என்பதை ஆராயுங்கால் எல்லா உயிர்களும் இன்பத்தை நாடியேதான் உயிர் வாழ்கின்றன. ஆனால் அவ்வின்பம் எது என்பதைச் சிந்திக்குமிடத்து, இடையறாமல் இன்பம் கொடுத்துக் கொண்டிருப்பதுதான் பேரின்பம். சிறிதுகாலம் இன்பமாக இருந்து பிறகு துன்பமாய் முடிவது சிற்றின்பம். ஆகவே பேரின்பப்பேற்றை ஒருவன் அடையவேண்டியதுதான் செய்யத்தக்கதாகும் என்பது விளங்கும்.

அத்தகைய பேரின்பம் எது என்பதை அறிந்து அதற்கேற்ற செயலில் ஈடுபடுவதொன்றே நமது குறிக்கோள். இறைவன் திருவடி நிழல் ஒன்றேதான் மக்களுக்கு இடையறாத இன்பத்தை நல்குவது என்பதை உய்த்துணர வேண்டும். அப்பர்சுவாமிகளைச் சுண்ணாம்புச் சூளைக்குள் இட்டு எரிக்கும்போது நீற்றறைக் குள்ளிருந்த வண்ணம் இறைவன் இணையடி நீழலையே தமக்காதரவாய்க்கொண்ட மன ஒருமைப்பாட்டால் அன்னவரை உலகத் தீயாகிய புறத்தீ ஒன்றும் செய்ய முடியவில்லை. நீற்றறையிலிருந்து அவர் வெளிவந்து பாடிய பாட்டைக் கேளுங்கள்:

> "மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈசன் எந்தை இணையடி நீழலே."

எனவே அடியார்களின் மகத்துவம் இத்தகையதென்பது அந்நிலையிலிருந்து அனுபவித்தார்க்கேவெளிப்படுவதொன்றும். மக்கள்பேரின்பத்தைஅடையவேண்டுமாயின் அடியார் பக்தியே சிறந்ததாகும். அந்நிலையில் அடியேன் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது கொள்கையில் பற்றுக்கோடுடையவன். அன்னாரது புனிதமான சரித்திரத்தைச் சதா சிந்தித்துக் கொண்டிருப்பதே போதும் என்பது எனது முடிவானதனால் அவரது சரித்திரத்தைக் கும்மியாகப் பாடவேண்டுமென்ற அவா என்னைத் தூண்டியது. தமிழ் மொழியில் ஆர்வம் எனக்கு உண்டு எனினும் அவ்வளவு பயிற்சி போதாது என்பது, நான் இயற்றியுள்ள இக் கும்மியைப் படிப்பவருக்கே விளங்கும். என்றாலும் என் போன்ற சாமான்யருக்கும் அது விளங்குவதுதான் எனது குறிக்கோளாதலால் என்னை யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள் என்ற ஒரே திடத்தினால் பாடி முடித்தேன்.

முதலில் நான் எப்படித் தொடங்குவது என்ற சிந்தனையில் ஆழ்ந்துகொண்டிருந்த சமயம், என் ஆப்த நண்பரும் தமிழ்மொழியில் ஆர்வமுள்ளவரும் கோவைக்கடுத்த வடவழி ஊரின்கண் வதிபவரும் ஆகிய திரு ச. சோமசுந்தரம் பிள்ளையென்பார் வர, அவரிடம் எனது கருத்தைத் தெரிவித்தேன். அன்னார் விநாயகர் காப்புப் பாடிப் பின்பு நூல் தொடங்கும்படி சொல்ல, விநாயகர் காப்பை உடனே பாடி முடித்து நூலைப் பாடத் தொடங்கினேன். இடையிடையே பல கருத்துக்களை அவர் உடன் இருந்து உதவ, சில தினங்களில் பாடி முடித்தேன். அவ்வப்போது அன்னார் உறுதுணையாக இருந்து இந்நூலை முடிக்க உதவிய நன்றி நான் என்றென்றும் மறத்தற் கியலாததொன்று. அவருக்கு என் மனமார்ந்த நன்றி.

நான் யாத்த இந்நூலை முழுவதும் எழுத்தெண்ணிப் படித்துப் பார்த்து அவற்றில் உள்ள குறைகளைக் களைந்து

## நன்கொடை உதவியவர்கள்

1. திரு அ. ஆறுமுகம் செட்டியார், கண்ட்ரேக்டர், கோட்டூர், மலையாண்டிப் பட்டணம் போஸ்டு.

2. திரு S. தோமாஸ், கண்ட்ரேக்டர், திருவாங்கூர்.

3. திரு K. N. கனகசபாபதி, சூபரவைசர், மராமத்து இலாகா, கொடுமுடி.

4. திரு K. வடிவேல் செட்டியார். கண்ட்ரேக்டர், கோட்டூர், மலையாண்டிப் பட்டணம் போஸ்டு.

# மதிப்புரை

வாழ்க்கையின் மேலாம் லட்சியத்தை நாடும் உத்தமர்களுள் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைப்பற்றிக் கேள்விப்படாதார் யாரும் இக்காலத்தில் இல்லை என்று இயம்பலாம். அவருடைய ஜீவியத்தை அறிவது எல்லா மதங்களின் சாரத்தையும் பிழிந்தெடுப்பதற்கு ஒப்பாகும். இக்காரணத்தை முன்னிட்டே அவர் உலகத்தவர் அனைவராலும் போற்றப்படுகின்றார். மாண்புடைய அம் மகாபுருஷருடைய வரலாற்றைப் பல பெரியோர்கள் பல பாஷைகளில் பல விதங்களில் எழுதுவதும் இயல்பே. தமிழ் மொழியிலும் அது சிலரால் சுருக்கியும் விரித்தும் எழுதப்பட்டுள்ளது.

மேலோர் மகிமையைப் பொதுமக்களுக்கிடையில் பரப்புவதற்குக் காவியம் பெரிதும் பயன்படுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிச் சிறுவர்களும் எளிதில் தெரிந்து கொள்வதற்கு ஏற்றவாறு அவருடைய வரலாற்றைப் பாடலாக எழுதியுள்ள ஸ்ரீமான் (ச. வே) வேங்கடசுப்பையாவின் செயல் போற்றுதற்குரியது. சொற்சுவை, பொருட்சுவை ஆகிய இரண்டையும் ரசித்தற் பொருட்டுக் கும்மியடித்து ஓதுதற்கு இச் சிறுநூல் தமிழ் உலகுக்குப் பெரிதும் பயன்படும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண
ஆசிரமம்
உதகமண்டலம்
15-12-38

சித்பவானந்தா

சேலம் நகரக்காப்புக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராக இருந்து ஓய்வுபெற்ற மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் கவிராஜ பண்டிதர், ஆந்திரக் காசியப திம்மப்ப அந்தணனுர் அவர்கள் அன்புடன் தந்தருளிய

# சிறப்புரை

திரு ச. வே. வேங்கடசுப்பையரென்பார் இயற்றி யுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதக்கும்மியை முற்றும் படித்துப் பார்த்தேன். சிறந்த எளிய நடையில் யாவரும் நன்கு உணரும்படி கும்மியாக இவர் சரிதத்தை யமைத் திருப்பது சாலவும் போற்றத் தக்கது. ஆன்ருேர் சரிதங் களை உரைநடையமைப்பிற் பொறித்துவெளியிடுவதோடு இத்தகைய செய்யுளமைப்பிற் பொருத்திப் பிரகடனஞ் செய்வதும் நேரிய நெறியேயாம். பவானிக்கருகில் உள்ள சமயசங்கிலியென்னும் பதியைத் தமது உரிமையூராகக் கொண்ட ஆந்திர அந்தணனுராகிய இவர் தமிழபிமானம் முதிர்ந்து சீரிய பைந்தமிழ் நடையில் ஞானதிவாகர ராகிய சுவானுபூதிப் பெரியார் திரு இராமகிருட்டினபரம ஹம்ச மூர்த்திகளது விழுமிய சரிதத்தைப் பாடநேர்ந்தது, இவரது முன்னைப் பிறவியின் தவப் பயனேயாம். என்னை? தூய பேரருளாளப் பெருந்துறவோரது வரலாற்று நெறி களைப் பண்டை நல்வினை யின்றிப் பாட முற்பட முயறல் எவ்வாற்ருனும் ஒல்லா தாகலானென்க. இயன்ற அளவில் இக்கதையினைச் சுருங்க வரைந்த திறன் மெச்சத் தக்கது. தமிழகத்தார் இந்நூலினைப் பெற்றுப் படித்துப் பார்த்தும் மற்று மித்தகைய புத்தகங்களை அமைத்து உல கிற்கு உதவுமாறு இவரைத் தூண்டுவார்கள் என நம்பு கிறேன்.

வேண்டிய வேண்டியாங்கருளும் வேலன் இவருக்கு இன்னருள் புரிவாஞக!

MADURA

உ
கடவுள் துணை

# ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதக் கும்மி

காப்பு

சீர்பரவும் ராம கிருஷ்ணபரச் செம்மல்மேல்
பேர்பரவ வேகும்மி பேசுதற்கு—நேர்பெறவே
நம்பிக்கை கொண்டுநான் நாடோறும் போற்றுகின்ற
தும்பிக்கை யானே துணை.

## 1

## அவதாரமும் இளம்பருவமும்

கங்கை நதிபாயும் வங்காள நாடதிற்
காமர் புகூரெனுங் கிராமத்திலே
துங்க மிகுங்க்ஷுதி ராம்சட்டர் ஜீக்கும்
தூய்மைச் சந்த்ரமணி தேவியார்க்கும். 1

ஆயிரத் தெண்ணூற்று முப்பத்தா றுமாண்டில்
ஆன பிப்ரவரி பதினேழில்
தாயினினிய கதாதரப் பெருமான்
தன்னரு ளாலே யவதரித்தார். 2

காரணத் தாலே கதாதரப் பேர்கொண்ட
கண்யர் ராமகிருஷ்ணர் தம்பதத்தைப்
பூரண மாகநம் புத்தி மகிழ்ந்திடப்
பூசித்துக் கும்மி அடித்திடுவோம். 3

இறைவ னியற்கை யழகி லிதயத்தை
என்றுஞ் செலுத்திஅன் புற்றிடுவார்
தரைதான் நடுங்கினும் தந்நெஞ்சத் தில்லச்சம்
சற்றேனு மில்லாத சத்துவராய். 4

சத்துவ மார்க்கத்தைச் சாதுக்கள் பாற்சென்று
தளராமற் கேட்டிடுந் தன்மையராய்
அர்த்தமில் லாதவௌ கீகப் பழக்கத்தில்
ஆசை சிறிதும்இல் லாதவராய். 5

சின்னஞ் சிறிய பருவத்தி லேயிவர்
செய்த அருஞ்செயல் கள்பலவாம்
சின்னஞ் சிறிய சிலைகளாய் மண்கொண்டு
செய்து பரன்பணி யாற்றிடுவார். 6

முன்னை வினைக்கிலக் காக இவர்சிந்தை
முற்றுந் துறவுமார்க் கத்திற்செல்லத்
தன்னிள வல்நிலை கேட்டுளம் நைந்திவர்
தமைய னிராமகு மாரர் வந்தே. 7

இல்லற மாகிய நல்லறந் தன்னிலே
இச்சை யுறும்படி செய்திடவே
மெல்ல இவரைக்கல் கத்தா நகருக்கு
மீட்டுச் சென்றேதம் பணியில்விட்டார். 8

## 2

## தக்ஷிணேசுவர ஆலயம்

செய்த புரோகிதச் செயல்கண் டனைவரும்
சித்தங் குளிர்ந்தே வியப்படைந்தார்
வைகலுந் தெய்வ வழிபாட்டி லன்றியே
மற்றெவற் றின்மீதும் மனஞ்செலுத்தார். 1

பாகீ ரதிகங்கை பாயும் தக்ஷிணேச்வரப்
பக்கலிற் சோலைப்பூங் காவனத்தே
மாகீர்த்தி ராச மணிராணி காளியின்
மாதல மொன்றுதா மாக்குவித்தே. 2

சத்தி சிவம்விஷ்ணு விக்ரகங் களதில்
தாபனம் செய்தனர் நாடோறும்
பத்தியு டன்பணி யாற்றுவ தற்கொரு
பக்குவி யந்தணன் வேண்டிவர. 3

ராணி மருகராம் மாமதுர நாதர்
ராமகிருஷ் ணர்திறம் நன்கறிவார்
பேணியவரிடம் தம்மெண்ணஞ் சொல்லிடப்
பிரியத் துடனிவர் மனமிசைந்தார். 4

பூசித்து வந்தசின் னாளைக்குள் ளேவிஷ்ணு
பொற்சிலைக் கால்களி லொன்றொடிய
யோசித்துச் சாஸ்த்ர விதிவிளக்க வந்த
யூகிகள் பூசலி லேபடிய. 5

கேட்ட கதாதரர் ராணி மருகர்க்குக்
கிஞ்சித்துக் கைகால்கள் தாமொடிந்தால்
தேட்டமாய்த் தேர்வரோ வேறு வரன் எனச்
செப்பனிட் டார்தாமே அச்சிலையை. 6

ஆயிரத்தெண் ணூற் றைம்பத்தைந் திற்றமக்
கானபத் தொன்பதாம் ப்ராயத்திலே
தாய்திருக் காளியின் சந்நிதி யர்ச்சகத்
தானம் வகித்தாரக் காலத்திலே. 7

தேவி யுபதேசம் பெற்றவ ரேபூஜை
செய்வ துசிதமென் றேயுணர்ந்தார்
மேவிக் கனராம்பட் டாச்சாரி யரிடம்
மெய்யன் பொடுதீட்சை பெற்றுவந்தார். 8

## 3

## தாயின் தரிசனம்

அருத்தமற் றவெறும் வார்த்தைகள் கைகாலை
ஆட்டுவ தெல்லாம் வியர்த்த மென்பார்
திருத்தும்திக் பந்தனம் பூதசுத்தியிவை
சிந்தித்த வண்ணம் அமையு மென்பார். 1

பஞ்ச வடியென்ற நளிர்காட்டுச் சோலைக்கண்
பாங்கான நெல்லி மரத்தடியில்
அஞ்சாது நள்ளிர விற்றனிச் சென்றங்கே
அன்னையை நினைந்தே தவங்கிடந்தார். 2

நாளுங் கண்டார்நண்ப ரான இருதயர்
நாடி யொருநா ளிரவினிலே
சூழு மிருளிற் றொடர்ந்தோர் புறம்நின்று
சூசனை யாகவே பார்த்திருந்தார். 3

உத்தரீ யம்உடை பூணூல் முதலிய
ஒன்றும் இலாது சிலையதுபோல்
சித்தத்தி னுள்ளே சிவானந்தம் பொங்கிடச்
தேவி பதத்தியா னத்திருந்தார். 4

கண்ட விருதயா மற்றநாட் காலை
கதாதரர் பாற்சென்று கேட்டதற்கு—அவர்
விண்ட விடையின் விவரத்தைக் கூறுவேன்
விரும்பியே கேளுங்கள் தோழிகளே. 5

தெய்வதச் சிந்தனைக் கிருக்கு மிடையூற்றில்
தீதாம் சாதிஅபி மானமொன்று
பொய்யான பாழ்ப்பேதப் புத்தி தொலைந்திடிற்
பொற்பாந் திருவரு ளெய்தும்நன்றாய். 6

சாதனை செய்யச்சத் தம்சிறிதுமில்லாச்
சாம வேளையே சிறந்ததொன்றும்
ஆதலிற் பூணூலு மின்றியா னம்மையை
அன்புடன் பூசித் திடுவனென்றார். 7

உள்ளம் நெகிழ உடல்குழை யமனம்
உலையி னிழுதென வேயுருக
அல்லும் பகலும்தம் தாயின் தரிசனைக்
காற்று தழுவார்கண் ணீர்பெருக. 8

பச்சைக் குழவியைப் போல்அழுவார் தேவி
பக்கலிற் சுற்றிருந் தேவருவார்
இச்சைக் குரியநைவேத்யம் படைப்பார்பின்
இன்பமாய் உண்ணென வேண்டிடுவர். 9

பித்தனென் றேபிறர் பேசுவார் ஓர்நாள்
பேணித் திருப்பணி யாற்றுகையில்
சத்தமிட் டார்அடங் காத்துய ரங்கொண்டு
தாயின் மனமு மிளகவில்லை. 10

அன்னை திருவடி காணு விடிலிந்த
அற்ப வுடலினை மாய்ப்பனென்று
முன்னிலை யில்வைத் திருந்தகூர் வாள்தன்னை
மூர்க்கத் துடன்கையில் ஏந்திநின்றார். 11

அத்தரு ணம்பவ தாரணி யாகிய
அம்பிகை தானு மருள்சுரந்து
சித்தம் குளிரத் தரிசனம் தந்திடச்
சேவித் தவருல கைமறந்தார். 12

தன்னிலை கெட்டிடத் தாயி னருள்பெற்றுத்
தனிப்பெருஞ் சோதியில் தாம்படிந்தார்
அந்நிலை தன்னில் இரண்டு தினமிருந்
தற்புதப் புத்துணர் வுற்றெழுந்தார். 13

நினைவு கனவோ டுறக்க மெனமூன்று
நிலையுங் கடந்த துரியமதில்
இணைய தெனவிரித் துணரா மனோலயம்
எய்திப்பே ரின்பத்தி லாழ்ந்திருந்தார். 14

சாந்தம் வாத்ஸல்யம்மா தாசியம் சக்கியம்
சன்மார்க்க மென்றைந்து பக்தி யுண்டாம்
போந்தவிவ் வைந்தையும் கைக்கொண் டிறையருள்
பூரண மாய்ப்பெற்று னந்தங்கொண்டார். 15

மதுர நாதரிவர் மனசைப் பரீக்ஷிக்க
மாதர் பலரைமுன் னேவிவிடப்
புதுமை யிதோவெனக் குழந்தை யுருக்கொண்டார்
புலன்களை வென்ற இராமகிருஷ்ணர். 16

## 4
## விவாகமும் வைராக்கியமும்

பித்தம் பிடித்ததென் றேபிற ராற்செய்தி
பெற்றதாய் கேட்டுத் துயரமுற்றார்
சித்தந் தெளியத் திருமணஞ் செய்தால்
சிறந்த தெனத்தம் கருத்திலுற்றார். 1

எங்கெங்குந் தேடியும் இங்கித மானவோர்
மங்கைநல் லாள்அகப் பட்டாளில்லை
துங்க முளராம கிருஷ்ணர்தம் சொற்படி
தொன்மை ஜயராமப் பட்டியிலே. 2

இராமச்சந்தர முக்கர் ஜீயின் புதல்வியாம்
ரம்யமான தேவி சாரதாவை
ராம கிருஷ்ணர்க்கு வதுவைசெய் தார்நல்ல
லக்கினங் கூடிய சுபதினத்தில். 3

இராப்பக லாய்மகன் திருமணத் தைநினைந்
திறைவனை வேண்டித்தான் கொண்டிருந்த
பிரார்த்தனை முற்றச் சந்த்ரமணி தேவியும்
பேரானந் தத்தால் மகிழ்ச்சிகொண்டார். 4

முற்று அறிவினள் என்று ராமகிருஷ்ணர்
மொய்குழல் சாரதா தேவிதன்னைப்
பெற்றாள் வசத்தி லிருக்கும் படிவிட்டுப்
பின்னுந்தாம் தக்ஷிணேச் சுரஞ்சென்றார். 5

சென்றதும் தேவி திருப்பணி யிற்சிந்தை
செல்லமற் றெல்லாம் மறந்துவிட்டார்
வென்றிகொள் யோகத் தமர்ந்தே யிராப்பகல்
வீற்றிருந் தம்மையைப் பூசித்தனர். 6

சாதனத் தாற்றாய்மை தானடைந்தமனஞ்
சற்குரு வாகி யெழுந்தருளி
போதனை செய்து புனிதனு கச்செய்யும்
பொற்பை யறிந்துரைத் தார்துருவி. 7

எல்லையில் லாநின்னை என்னென் றுரைப்பேனென்
றேத்திச் சிவபெரு மானிடத்தே
நல்ல மஹிம்னஸ் தோத்திரம் பாடிமெய்ஞ்
ஞான சமாதியில் வீற்றிருப்பார். 8

## 5

## தாந்திரிக சாதனம்

கல்வித் திறனோடாத் மானு பவம்வாய்ந்த
கன்னிப் பிராம்மணி யம்மையவர்
செல்வத் திருப்பெயர்ப் பைரவித் தாய்வந்து
சேர்ந்தார் ஓடமூர்ந்து தக்ஷிணத்தில். 1

தாயுஞ் சேயும்போ லிருவருஞ் சந்திக்கச்
சாந்தம் மிகுந்தஸ்ரீ ராமகிருஷ்ணர்
பாயுமா னந்தக்கண் ணீர்சோரத் தம்மனு
பவங்களை எல்லாம் விளங்கச் சொன்னார். 2

பேணிச் செவிசாய்த்த பிராம்மணி யம்மையார்
பித்தனும் நீயல்ல என்மகனே
மாணிக்க வாசகர் போல்மஹா பாவனை
வாய்த்த துனக்கென்றார் மாதவனும். 3

பைரவி யம்மை வழக்கம்போ லோர்நாளிற்
பஞ்ச வடியில் ரகுநாதர்க்கு
நெய்ய முதுபடைத் திட்டுத் தியான
நிலையி லிருக்கக் கதாதரர்க்கு. 4

ஓர்வித மான நிலைதானுண் டாகியங்
கோடியம் மாது படைத்திருந்த
ஆரமு தைத்தா னருந்து கையில்ராமர்
அருந்துங் காட்சியம் மாதறிந்தாள். 5

கண்டு திடுக்கிட்டுக் கண்விழித் தாள்தாய்
கதாதர ரும்நினை வாய்ப்பயந்தார்
உண்டவன் நீஅல்ல உன்னுள் ளிருந்தாட்டும்
உற்ற பரமனென் றேமொழிந்தார். 6

தாந்திரிக சாதனச் சித்திபெற்ற சாக்த
சமயத்தைச் சார்ந்திட்ட கௌரிகாந்தர்
ஆந்த்ர மாகராம கிருஷ்ணரைச் சோதிக்க
அம்மையின் சந்நிதிக் குள்ளேவந்தார். 7

வந்ததும் அம்மையின் முன்னிலை தன்னில்
வழக்கம் போலேபே ரொலிமுழக்க
வந்தவர் செய்தி யுணர்ந்து ராமகிருஷ்ணர்
வாய்ந்தவம் மந்த்ரத்தை யுச்சரிக்க. 8

இருவ ரொலியும்பே ரிடிமுழக் கம்போலங்
கிருந்தவர் யாரும் திடுக்கிடவே
நிறுவிய பின்கௌரி சாந்தரும் தாம்கொண்ட
நிலைதளர்ந் தேதோல்வி யுற்றிடவே. 9

அன்று முதலவர் ஆணவ முந்தேய்ந்து
அட்டமா சித்தியும் விட்டகன்று
என்று மெதார்த்தமாம் ஈசுர சேவையி
லீடுபட் டேயருள் பெற்றார்நன்று. 10

பத்தாறு நான்கு பகுதியாய்த் தாந்த்ரிகம்
பகருமங் கங்கள் பலவுமொன்றாய்
வித்தார மாகப் பிரிந்திடில் மூன்றாகி
வீரந்திவ் யம்பசு பாவமென்றாம். 11

இச்சாதனங்க ளெல்லாமவ ரம்மையின்
இன்னரு ளாலே இனிதடைந்தார்
மெய்ச்சான் றுடனிந்த மேதினி யோர்க்கிதை
மெய்ப்பிக்க வேஅவ தாரங்கொண்டார். 12

மூலாதா ரம்முதல் மேலாஞ்ஞை யின்வரை
ஆறாதாரமும்நம் முள்ளேஎன்பர்
நாலாவ தான விசுத்தியா தாரத்தில்
நாடிட வேமௌனம் கூடுமென்பார். 13

குண்ட லினிசக்தி ஆஞ்ஞையி லேஎழுக்
கூடும் பரமாத்மா தரிசனந்தான்
விண்ட சகஸ்ரத்தில் குண்ட லினிசெல்ல
விளங்குமச் சிவன் பரத்தினுற்றே. 14

அவதார புருஷரல் லாதவர் தாமிந்த
அரிய நிலையைவிட் டேயிறங்கித்
தவறுமற் பிரபஞ்ச ஞாபக மெய்திடத்
தரியா தெனப்புகல் வாரிறங்கி. 15

பரவையில் விழுமுப்புப் பிரதிமைகள் போலப்
பரத்தில் ஐக்கியமாவர் ஜீவன்முக்தர்
விரவிய மூவேழு நாளி லவர்தேகம்
வீழ்ந்திடு மென்பதே சாஸ்த்ரயுக்தம். 16

சக்தி சிவமென்ற வேற்றுமை போயங்கே
சகஸ்ராரத் தில்நிற்குஞ் சேதனமே
முக்கோணம் போலொரு ஜோதி மயமாகி
முன்னின்று தோன்றக்காண் பாய்தினமே. 17

முக்கோணத் துள்ளே ஜகங்கள் பலபல
முகிழ்த்து மலர்ந்து மறைந்தனவாய்
அக்காலத் தாங்கே யனுகத மாந்தொனி
ஆனந்த மாகவே கேட்டதுவாம். 18

கேட்ட வனுகதத் தொனியின் பயனுகக்
கீழ்ச்சாதிப் பறவைகள் பாஷையெல்லாம்
தேட்ட முடன்அறிந் தார்காலை மாலையில்
தேவனைப் போற்று மவைகளெல்லாம். 19

அட்டமா சித்தியி லாசைசற் றேனுமி
லாதவ ரேநன்மு மூக்ஷுக்களாம்
திட்டமு டன்இதை விட்ட ராமகிருஷ்ணர்
தேகாத்ம புத்தியும் போக்கினராம். 20

அபயம் நிராசை யெனும்இரு வார்த்தையி
லடங்கும்வே தாந்தத்தின் சாரமெல்லாம்
உபய மென்வே மனத்தைத்தாய் பால்விடுத்
துள்ளன் புடன்போற்று வார்க்குநல்ல. 21

அரும்பிரம வித்தைக்கே ஆகு முபாயமாம்
அபயம் வரமிரண் டும்தருவாள்
நெறியினில் தாந்த்ரிக சாதன மொன்றென
நிச்சயித் தாரேஸ்ரீ ராமகிருஷ்ணர். 22

## 6

## மலரை நாடிய வண்டுகள்

இராம கிருஷ்ணர்தமக் கான வுறவர்து
ராசார மொன்று பயின்றவராம்
இராதாகோ விந்தர் திருக்கோவி லர்ச்சக
ர்கப் பணிபுரி கின்றவராம். 1

இட்டபெயர் ராம தாரக ராமமைத்
திட்டபெயர் ஹல தாரியென்றும்
விட்டா லவர்சாபந் திட்டமா கப்பலித்
திட்டே பலரை வருத்துமொன்றும். 2

கெட்ட குணத்தாற் பலரும் புறங்கூறக்
கேட்டி ராமகிருஷ்ணர் கோபங்கொண்டார்
இட்டிவந் தோர்நா ளவரைக் கடிந்தேயக்
கீழ்மை யகற்றும் படிக்கு விண்டார் 3

இராமகிரு ஷ்ணர்சொல்லைக் கேட்கச் சகியாமல்
ரத்தமா கவாயிற் கக்கும்படி
ராமதர் ரகருஞ் சாபமிட் டார்கொஞ்ச
நாளைக் குள்ளே அவர் வாக்கின்படி. 4

இராமகிருஷ் ணர்வாயி னின்று முறைந்தவி
ரத்தங் கொடிகொடி யாகவரச்
சேமம் படவவர் சாப மிவர்க்குற்ற
தென்று பலரும்சந் தேகமுற. 5

அச்சம் யம்அட யோகம் பயின்றதால்
ஆனதிச் செயலென் றவருணர்ந்து
அச்சங்கொள் ளாதிர்க ளென்றொரு சங்யாசி
ஆறுத லாக்கின ராம்புகர்ந்து. 6

தாபந் தணிந்தது மேராம கிருஷ்ணர்முன்
தன்மையை யெய்தி விளங்கினராம்
சாபங்கள் வந்துறி னும்நன்மை தந்திடத்
தாயின் திருவருள் மேவிடுமால். 7

கல்வி மதமுற்ற வாசாஞா னியான
கர்வங் கொண்ட ராம தாரகரும்
நல்ல குலாசாரம் சாதி யொழுக்கமே
நாடாத மூடனென் றூர் இவரும். 8

புன்னகை கொண்டே, "உமைப்போற் பிரபஞ்சம்
பொய்யாம் பிரமமே மெய்யாம்" என்று
பன்னுவ தன்றிப்பின் மக்களைப் பெற்றிடும்
பான்மையென் றேவெனக் கேட்டார்நன்று. 9

ராமகிருஷ் ணர்கண்ட தெய்விகக் காட்சிகள்
நம்பத் தகாத மனோகற்பிதம்
ஆமென் றலதாரி சாதிக்க வேயவர்
அக்கண மேசென்று தாய்பொற்பதம். 10

போற்றிச் சிறிதுநே ரத்திற்குள்ளே வந்து
"போம்போம்நீ ரேதோ பிதற்றுகின்றீர்
சாற்றும்அன் னைதிரு வாக்கேநம் பிக்கையாம்
சாதுரி யங்களு மகற்றும்" என்றார். 11

ஸ்ரீஜகந் நாதம் கங்காதீ ரத்துக்கும்
போகும் யாத்ரீக சாதுக்கள்தாம்
கோரிவந்தே தக்ஷிணத்தில் சிலநாட்கள்
கூடி யிவரோ டுசாவுவாராம். 12

எந்த மதங்களின் உண்மைகளும்நம்
இந்து மதத்தினி லேயடங்கும்
என்ற விவர மனைத்தும் இராமகிருஷ்ணர்
எடுத் தறிவித்தன ரேதொடங்கி. 13

பாமரர் போலவே பார்வைக்குத் தோற்றுவார்
பாரினி லீடு படாதிருப்பார்
தாமரை யிலையினில் தண்ணீரைப் போலவே
சாக்ஷி மாத்திரமாய்த் தாமிருப்பார். 14

இம்மதம் போற்றுமோர் சித்தனென் றேத்தும்
இயல்புடை யாத்ம பரிபூரணர்
தம்முட் பரமார்த்தப் பேரின்ப முந்தூய
தான நிலையின் அருட்காரணர். 15

தெய்வத்தின் வேறான எண்ணந் தொழில்கொள்கை
தேரும்நட் பேதுமில் லாதவராம்
உய்வித் திடும்பர மொன்றனை யேயிவர்
ஒப்புயர் வற்றதா யெண்ணுவராம். 16

ஓதா துணர்ந்தந்த மில்லாத பேரறி
வுற்றுப் பரவச மாம்நிலையும்
தூய்தாம் மனத்தில் குழந்தையின் சாந்தமும்
தோன்றவே அன்பிவர் பாலமையும். 17

வாழ்விற் குறுதி பயப்பவை யாவையும்
வாய்க்கப்பெற்றார் நம்மிந்து மதந்தான்
தாழ்வுற்று மறைவதற் கிருந்த தருணத்தில்
தாரணிக் கண்ணே யிவர்பிறந்தார். 18

மலர்தமை நாடிவரும் வண்டுகள் போல
வருவர்களாம் சாக்த சன்யாசிகள்
பலர்வைஷ் ணவசைவ சித்தாந்த வேதாந்த
பக்குவிகள் அயலூர் வாசிகள். 19

வந்திவர் வாய்மொழி கேட்டுணர்ந்த பேர்கள்
வாய்ந்த சந்தேகவி பரீதங்கள்
எந்தத் துறையின வாயினும் நீங்கப்பெற்
றின்புற் றகமகிழ்ந் தேகுவராம். 20

## 7
## பிரேமைப் பைத்தியம்

வைஷ்ணவ பக்தர் ஜடதாரி என்பவர்
வாத்ஸல்ய பாவனை தான்கைக்கொண்டு
மைவண்ண னும்பால ராம பிரானைத்தம்
மைந்தனுய்ப் பாவித்தி றைஞ்சக்கண்டு. 1

வேண்டுவார் வேண்டுவ தீயும் பிரானவர்
வேண்டுத லுக்காய் மனங்குளிர்ந்தார்
பூண்டார் குழந்தை யுருவி லினிதாகப்
புத்தி மகிழுநற் காட்சி தந்தார். 2

காட்சி தந்தபால ராமனுந் தம்முடன்
கருணையோ டாடி விளையாடி
ஆட்சிய தாகத்தாம் படைத்த வமுதுண்ண
ஆனந்த மாய்க்களித் தாரமர்ந்தே. 3

தக்ஷிணத்திற்கு வந்து ராமகிருஷ்ணர் முன்னே
சம்பாஷித்தார் ஜடதாரி யோர்நாள்
பக்திமார்க்கம் பற்றிப் பகர்ந்திடும் காலையில்
பாலராமன் ராம கிருஷ்ணர்தம்பால். 4

பற்றுதல் கொண்டவர் பக்கல் அடிக்கடி
பக்ஷமாய் வந்து விளையாடுவான்
மற்று மவர்தாம் மனமகிழ்ச்சி கொண்டு
மைந்தனை நாடோறும் போற்றிடுவார். 5

கங்கை நீராடுவான் வெய்யிலில் ஓடுவான்
காவனத் திற்சென்று புட்பங்கொய்வான்
துங்க முளவவ னிங்கிதச் சேட்டையின்
தொந்தரை யாலே அடித்திடுவார். 6

கிட்டாத தின்பண்டம் வேண்டு மெனக்கேட்கக்
கிடைத்த அவல்தனிற் கொஞ்சந்தரத்
தட்டாமல் வாங்கித் தனைய னுணுங்காலைத்
தாக்கியே நெல்லொன்று வாயைக்கீற. 7

இரத்தம் பெருகிடக் கண்டி ராமகிருஷ்ணர்
இளகி மனஞ்சகிக் காதழுவார்
சிரத்தையாய்க் கோசலை வளர்த்த வுனைநான்
சினந்திட லாச்சுதென் றேங்கிடுவார். 8

இவ்வண்ணம் பால ராம னிருக்கக்கண்
டிராம கிருஷ்ணர் பாலிருக்கும்படி
செவ்வனே விட்டுச்சென் றுராம் ஜடதாரி
செப்புவேன் இன்னுந்தான் கேளுங்கடி. 9

தாய்தந்தை யாந்தமர் தாரம் மகவொடு
தன்றுணைவனெனச் சிந்தை செய்தே
பாய்மனந் தன்னை நிலையில் நிறுத்தப்
பழகுவதாந் தூய பாவனையே. 10

பாவனைகள்பல வற்றிலும் மதுர
பாவனையே சாலச் சிறந்ததுவாம்
பாவனை தான்சதி பதியாகவே மனம்
பாவித் திடுதலச் சாதனமாம். 11

ராமகிருஷ்ணருமிச் சாதனை மேற்கொள
நாடிப்பெண் போலே யுடைதரித்துத்
தாமதமின்றி மதுரநா தர்மனைத்
தையலர் பாற்பழ கித்தனித்து. 12

ராதையைப் போலவே தாமும்ஸ்ரீ கண்ணனை
ஏத்தித் தொழுது வழிபடுவார்
"கோதையெனைக் கூடியே யின்பந்தா" வென்று
கூவி யழைத்தே யழுதிடுவார். 13

நாதரைக் காண்பதென் றேவெனக் காதலால்
நாளும் நினைந்து கசிந்துருகி
வேதனை யாலே தலைவன் வரவை
விரைந்தெதிர் நோக்கி மனங்கருகி. 14

அன்னபா னாதிக ளைக்கருதாம
லழுதவண்ண மாயே யிருக்க
என்ன சொல்வேன் பிரேமைப் பயித்திய மாய்மாறி
இயங்கியவர் சித்தந் தான்கொதிக்க. 15

மயிர்க்கால்கள் தோறு மிரத்தங் கசிந்தூறி
மாரும லேதுளி கள்சிதற
உயிர்த்திடாப் பிணம்போற் புலன்க ளடைபட்டே
உள்ளம் அணுவாய்நைந் தேபதற. 16

அந்நிலையில் மாது ராதை யிடங்கண்ட
அறுமூன்றோ டொன்றழ கத்தனையும்
தன்னியல்புதிரி யாதிவர் பாற்கண்ட
தன்மையது சொல்லுந் தரத்ததல்ல. 17

ராதையின் ரூபங் கொண்ட ராமகிருஷ்ணரை
ராதாகிருஷ்ணன் நாடி வந்தருளிப்
பேதமின் றித்திரு மேனியில் ஐக்கியமாய்ப்
பிரிவின் றி யேயிருந் தார்மருவி. 18

காணும் பொருளெலாங் கண்ணனாய்த் தோன்றின
காட்சியி லானந்தங் கொண்டிருந்தே
பேணுமப் போதவ ருள்ளக் கொதிப்பெலாம்
பெட்டகப் பாம்பா யடங்கப்பெற்றார். 19

# 8

## நிர்விகற்ப சமாதி

பொதுவி லிரண்டு சமாதிக ளுண்டதைப்
புகலின் நிர்விகற்ப பாதமென்றும்
இதுவரைக்கும் ராம கிருஷ்ணரடைந்த
திரண்டவ தான சமாதியொன்றும். 1

பூரண நிர்விகற்ப மடைந்தால் மீண்டும்
பூவுலகி னுணர் வில்லையென்பர்
காரணமாக வவதரித் தோர்மட்டுங்
கண்விழிப் புற்று வருவரென்பர். 2

நருமதை யாற்றின் கரையின் அருகிலே
நான்கு பத்தாண்டு தவம்புரிந்து
நிருவி கற்பநிலை கொண்ட தோதாபுரி
நேராகத் தக்ஷிணத் திற்குவந்து. 3

அம்மையி னுலய வாயி லருகினி
லமைதியாக நிட்டை சாதித்தநம்
செம்மை நலமுடை ராமகிருஷ் ணர்தீரந்
தேர்ந்த தோதாபுரி சென்றருகில். 4

அத்வைத மார்க்கத்தில் ஆசையுண் டோவென
அம்பிகை பாற்சென்று ராமகிருஷ்ணர்
உத்தரம் பெற்றுவந் தோதும் படிக்கேட்க
ஓதினர் பிராம்ம முகூர்த்தத்தினில். 5

கரணங் கள்யாவுங் கடந்தேயுட் சென்றவர்
கடைசியிற் கண்டாரம் மைவடிவைச்
சரணஞ் செய்தாரவ ளல்லாமல் வேறொன்றுஞ்
சம்பவிக்க வில்லை யென்றறைய. 6

வாளாம் விவேகத்தால் வெட்டி யவளைநீ
மாய்த்துமேற் செல்லென வேபணித்தார்
தாளாம லவ்விதமே செய்தங் குச்செல்லச்
சார்ந்தது சூனிய மென்றுரைத்தார். 7

நெற்றியைக் கீறியங் குன்மனத் தைநிலை
நிற்கச்செய்தே பாழ்புலப் படுங்கால்
முற்றிய ஞான விளக்கேற்றி யேமேலே
முற்றுங் கடந்துபோ கப்பணித்தார். 8

அவ்விதமேராம கிருஷ்ணர் தாமுமங்கே
நிர்விகற்பத்தில் மனம் நிலைத்தார்
எவ்விதத் தும்அசை வின்றிச் சிலைபோல
ஏக வெளிதனி லைக்யமானார். 9

இந்நிலையில் மூன்று நாட்கள் கழிந்தபின்
ராமகிருஷ்ணர் நிட்டை தான்கலையா
மெய்ந்நிலையத்வைத சித்திபெற் றார்அதை
விளக்கமாய்க் கண்ட தோதாபுரியார். 10

நாற்பது ஆண்டு தவமியற் றிப்பெற்ற
நற்சமாதி இவர்க் கோர்நாளில்
தோற்றியதாலே வியந்துவாத் ஸல்யத்தால்
தோத்திரஞ் செய்தார் மனங்களித்தார். 11

ஹரி ஓமெனுந் திருமந்திரத் தையவர்
அறியும் படிசெவி தனிலோதிப்
பரிவுடனே புறவுணர்ச்சி வரச்செய்தார்
பார்த்தார் குருவைஸ்ரீ ராமகிருஷ்ணர். 12

தோதா புரியின் மலர்ப்பதத் தில்வீழ்ந்து
தோத்தரித் தாரன்பு தான்பெருக
மாதம் பத்தொன்று வரைக்கும் பிரியாது
வாழ்ந்தார் தோதாபுரி சீடருடன். 13

மாயா சத்தியின் வன்மையி லேமட்டும்
மாற்ற மிருந்த இருவருக்கும்
வாயாது முத்திதான் பத்தியி லென்றே
வழுத்துவார் தோதா புரிகுருவும். 14

தாயாம் சத்திக்குள்ளே பரமாத்மா வாகிய
தானடங்கப் பெற்ற தன்மைகண்டு
ஓயா தம்மைபால் பத்தி புரிந்தருள்
உற்றவர்க் கேமுத்தி வாய்க்குமென்று. 15

செப்பு மிராம கிருஷ்ணர வர்சொல்லில்
தேற்ற மில்லாத தோதாபுரிக்கு
எப்படியோ தேகக் கட்டுக் குலைந்தபின்
ஏற்பட்டது வயிற்றுக் கடுப்பு. 16

நாளுக்கு நாள் அதிகமாக வேவலி
நாடும் மனத்தை யுயர்நிலைக்கு
மீளவிடாத தாலே பிரம்ம ரந்த்ரத்தில்
மேவவிட் டேகங்கை யிற்குதிக்க. 17

கங்கைநீரும்அவர் காயத்தை அக்கரை
கடத்திய தன்றி யழிக்கவில்லை
பங்கமாய் நின்ற மறைவொன்று நீங்கிப்
பரைதாயின் தோற்றம் எங்கும் கண்டார். 18

உலகமும் அதிலுள பொருள்களும் உள்ளத்தின்
உணர்வும்அத் தாயின் உருவமென்று
நலமுறக் கண்டந் நடுநிசி யிற்றாயின்
நற்பதம் போற்றி யடிபணிந்து. 19

திரும்பவும் நதிகடந் தேவந்து தக்ஷிணேச்
சுரத்தில் ராமக்ருஷ்ணர் தம்மைக் கண்டார்
விரும்பி யருகிலழைத்தவர்க் குற்ற
விவரமனைத்தையுந் தாம்நவின்றார். 20

இருவரு மாகவே தாயின் தளிதனில்
எழுந்தரு ளம்மையைத் தாள்வணங்க
அருளினன் தாயுந் தோதாபுரி யையேக
அரிய தக்ஷிணத்தை விட்டகன்றார். 21

சகுணமும் நிர்க்குண மும்ஒரே வஸ்துவில்
தளரா திருப்பவை யாமிதுதான்
தகுமொரு மாணிக்கத் தோடதன் ஒளியெனச்
சாற்றவல் லார்க்கிது தான்புலனும். 22

பிரமத்துக் கும்ஜகன் மாதாவுக்கு முள்ள
பிணிப்பு மிவைபோன் றதாகுமென்று
பரமகாருண்ய ஸ்ரீராம கிருஷ்ணரதைப்
பலகாலெடுத் தோதி னுரேநன்று. 23

# 9

## அநுபூதியும் சமரசமும்

பெரியோர்கள் கண்ட மதங்க ளனைத்துமோர்
பெற்றித் தானபரம் பொருளதனை
அறிதற் கானநாளு மார்க்கங்க ளென்றே
அறைகுவ தேயவர் சற்போதனை. 1

போதித்திடுமளவில் நில்லாமலதைப்
பொன்னேபோ லனுட்டித்துங் காட்டிடுவார்
ஆதி முகம்மதிய மதத்தினிற் சூபி
ஆன வகுப்பைச்சேர் சன்யாசி. 2

தக்ஷிணத் தில்வந்து தங்கிய போதவர்
தன்மையும் பக்தியும் தாமறிந்து
இச்சை கொண்டுராம கிருஷ்ண ரிஸ்லாமியத்
தினிய மார்க்கத்தையுங் கைக்கொண்டனர். 3

அல்லாவின் நாமத்தை யுச்சரித் தார்சதா
அரியமுஸ் லீமைப்போ லுடையுடுத்தார்
எல்லாவித ஒழுங்கோடும் நமாஸ்சொல்லி
இந்து மதநினை வைவிடுத்தார். 4

விடுத்திருந்த சொற்ப நாளுக்குள் ளேதான்
விரும்பிய அம்மதத் தின்முடிவை
அடுத்தின்ப மான நபியின் உருவத்தை
அடைந்தா ரெளிதிற்பின் அவ்வடிவம். 5

சகுணமாக மாறி யதுவே திரும்பவும்
தனித்தநிர்க் குணமாக மாறியதாம்
தகுமேஇஸ் லாமிய சாதனம் பயின்றது
தாய்நாட்டின் பிற்கால நன்மைக்கென்றும். 6

ஆயிரத் தெண்ணூ ற்றறுபத் தேழிலவர்
அரிய வுடல்நலத் தைக்கருதிப்
போயினரா மிருதயரோடு காமர்
புகூரின்தம தில்லத் தைக்குறுகி. 7

இதுவரை ஜயராம பட்டியில் வதிந்த
எழிற்சார தாதேவி யங்குவந்தே
வதுவைத் தலைவர்பால் உடல்உள்ளம் யாவையும்
வைத்து வணங்கினர் துணைநாடி. 8

பரமஹம்சரும் தம்தூய பத்தினிக்குப்
பலபயிற்சியும் பகர்ந் தாரவைகள்
திறமான ஆன்மசம் பந்தமா னவையன்றித்
தேகத்தோ டொட்டிய தேதுமில்லை. 9

எட்டுமாத மாயிருந்து தேகநலம்
எய்திப்பின் தக்ஷிணத் திற்குச்செல்லக்
கிட்டிரெயில் நிலையத் தருகிருக்கக்
கிளர்வெண்மை யாய்த்தும்பை நெல்வயலில். 10

பூத்திருக் கக்கண்ட ராமகிருஷ் ணர்சென்று
புஷ்பங் கொய்துதம்மேற் சாத்திக்கொண்டு
மாத்திரைப் போதிற் சிவத்தியா னத்துற்றார்
மற்றேதுந் தாமறியா திருந்தார். 11

ரயில்வண்டி வந்திட ஹிருதயர் சென்றுநம்
ராமகிருஷ்ணரைச் சுமந்துவந்து
ரயிலில் சேர்த்தாரிம் மாதிரியடிக்கடி
ரமிப்பார் சமாதியி லேயுவந்து. 12

# 10

## க்ஷேத்திர யாத்திரை

ஆயிரத் தெண்ணூற் றறுபத் தெட்டாம்ஆண்டு
அரிய தமரொடு யாத்திரைக்குப்
போயினராம் மதுரநாதருந் தம்மொடு
புகழ்ராம கிருஷ்ணரை யும்அழைத்து. 1

வைத்ய நாதமென்னுந் தலத்தை அடைந்தங்கு
வாழும் ஏழைமக்கள் தம்மைக்கண்டு
வைத்திருந்த பொருளா லன்னவஸ்திரம்
வழங்கிய பின்காசி சென்றனராம். 2

காசிக்குச் சென்றங்குக் கண்ட திருக்காட்சி
கருதுதற் கும்மிக அரிதரிதாம்
காசிவிச் வேசரும் கேதா ரநாதரும்
காட்சிதரும் கோயில் இரண்டுளதாம். 3

சாதுக்களாங் காங்குறைபவர் பால்இந்தச்
சாது ராமகிருஷ்ணர் சென்றுவந்தார்
தீதில் திரைலிங்க சுவாமிகள் மீதிவர்
தெவிட்டாத பேரன்பு பூண்டிருந்தார். 4

புகலுமணி கர்ணிகைதனில் ஜீவர்க்குப்
போக்குவா ளாம்சத்தி பாவங்களைப்
புகலுவாரீசுவரர் காதினில் தாரகம்
போய்ப்புக வேமோக்ஷ வீடதனில். 5

சமாதி நிலையி லவர்கண்ட காட்சிகள்
சாற்றவொண் ணாதுசின் னாட்கழித்து
யமுனா நதியரு குள்ளபிருந் தாவனம்
அணுகியங் குச்சில நாட்கழித்தார். 6

கங்கைமா தாவென்ற அம்மையா ரங்குக்
கருதித் தவஞ்செய்து கொண்டிருந்தார்
துங்க முளராம கிருஷ்ணர்அவ் வம்மைபாற்
றோன்றிநாளும்கண் டுளம்மகிழ்ந்தார். 7

தாயினருகிற்றன் கால முழுவதும்
தங்கியங் கேகழிக்க நினைவாம்
ஆயினும் ஆக்கினை அவ்வாறில் லாததால்
அதனைவிட்டுக் காளி கட்டமுற்றார். 8

கொலுட் டோலாவில் ஸ்ரீசைதன்யர் உற்சவம்
கொண்டாடுவ துண்டாம் வைஷ்ணவர்கள்
கொலுமேடை மீதிலோ ராசன மிட்டங்குக்
குழுமி மலர்சாத்தி வணங்குவார்கள். 9

கௌரங்கர் சூட்சும தேகத்தில் வந்து
கடாட்சிப்ப தாய்ப்பக்தர் கருதினரே
கௌவரமாய் ராம கிருஷ்ணரை ஒருமுறை
காட்சிக் கழைக்கவே வந்திருந்து. 10

பகவானை எல்லோரும் பஜனை செய்தாரங்குப்
பரவச மாகியே ராமகிருஷ்ணர்
பகவா னிருக்குமவ் வாசனத்தின்மீது
பாய்ந்தேறி நின்றே சமாதியுற்றார். 11

சைதன்ய தேவராய் மாறினர் எல்லாரும்
சக்தியை உணர்ந்து வியந்தார்கள்
செய்த நெறியினின்றே தெளிந் தார்பின்பு
க்ஷேத்திரத்திற் குத்திரும்பி வந்தார். 12

பகவான் தாஸ் பாபாஜி என்றவோர் வைஷ்ணவ
பக்தர் இச் செய்தியைக் கேள்வியுற்றே
இகழ்ந்திந்தச் செய்கை இவருக் கடாதென்றே
ஏசிமிகக் கடிந்து ரைத்தாராம். 13

இதொன்று மறியாத ராமகிருஷ்ணர் பின்பு
ஈரொன்பான் நூறேழு பத்தாண்டில்
நதியா என்னும் நவத்வீபத் துள்ளுறை
நற்பாபா ஜீயைத்தாம் பார்க்கச்சென்றார். 14

பாபாஜீ இவரது பக்குவங் கண்டுமுன்
பழித்ததம் செய்கையைத் தாம்நினைத்துக்
கோபத்தி னாற்செய்த பிழைக்காய் மனம்நொந்து
கொண்டு மன்னிப்புக்கேட் டார்பணிந்து. 15

பத்துட னாருண்டு பணிவிடை கள்செய்து
பரமார்த்தி கத்திலும் பழகிவந்த
ப்த்தியிற் சிறந்த மதுரநா தர்தாமும்
பரகதி யடைந்தார்பின் னோராண்டில். 16

## 11

## பெண்ணெலாம் அன்னை வடிவம்

கணவ ரருள்பெற்ற சாரதா தேவியும்
காலம் வரும்வரை காத்திருந்து
கணவரோடும் தக்ஷிண த்தி லமர்ந்திடக்
கங்கா ஸ்நானத்தின் நிமித்தம் வந்தார். 1

அன்னை சந்திரமணி தேவியும் தம்முடை
அந்திய காலங் கழிப்பதற்காய்
உன்னி வந்தார்தம் மருகியொடுங் கூடி
உற்றநல் வாழ்க்கையில் வாழ்ந்திருந்தார். 2

தமது முயற்சியில் லாமலே தாயுந்தன்
தரும பத்தினியுங் கூடியது
தமதாயி திருவருள் என்று ராமகிருஷ்ணர்
தாழ்விலா வாழ்க்கைத் துணைசிறந்தார். 3

குடும்பக்கல்விமுதல் பிரம்ம வித்தைவரை
குறித்து உபதேசித்தார் கோவையாக
நடுநிலை யோடிறை வழிபா டியற்றிட
நாட்டி மனநிலை கூட்டுவித்தார். 4

இரவும் பகலுமிடை விடாமல்ஸ்ரீ
ராமகிருஷ்ணர்தம் மனைவியுடன்
பரவியிருந்து காமவிச் சையில் லாமலே
பாங்கான வாழ்க்கையி லேபடிந்தார். 5

இருவரும் ஒருமித்தொரே படுக்கை கொண்ட
எத்தனையோ நாட்க ளுண்டெனினும்
ஒருமனப் பட்ட சமாதி யவஸ்தையில்
உறைந்து கிடப்பாராம் ராமகிருஷ்ணர். 6

தேகத்தை ஈன்றதும் ஜகன்மா தாஇங்கே
தேகத்தைக் காப்பதும் ஜகன்மா தாவந்து
தேகப்பணி செய்வதும் மாதா எல்லாம்
தேவியின் திருவுரு எனுந்தாதா. 7

ஓர் திரு நாளிரவிற் காளி பூஜைக்காய்
உரிய பொருள்களைச் சேகரித்து
ஓராசனத்தில்ஸ்ரீ சாரதா தேவியை
உட்காரச் செய்வார் ஆராதித்து. 8

தேவிக்குச் செய்யும் வழிபா டெலாமிந்தத்
தேவியின் மூலம்செய் தேமுடித்தார்
ஆவிநேயமின்றி ஆன்ம நேயங்கொண்டே
ஆனந்தத் தேயிரு வரும்படிந்தார். 9

பலநாட்கள் பஞ்சவடியினி லேசுவைப்
பத்தி செய்தாராம்ஸ்ரீ ராமகிருஷ்ணர்
சிலநாளி லேசுவும் அன்புரு வில்வந்து
தேகத்துள் ஐக்கியம் ஆயினராம். 10

ஏசுவும் புத்தரும் இறைவன் அவதாரம்
என்று ராமகிருஷ்ணர் போற்றுவராம்
பேசும் பலவேறு மதங்களும் கடவுளை
பெறுதற் கானபல வழியென்பாராம். 11

இறைவன் திருநாமம் இருப்பிடம் யாவையும்
எண்ணிடின் சின்மய மேயாகும்
பிரமம் ஒன்றேஅது வடிவிற் பலவாகப்
பேதித்துக் காண்பது வேயாகும். 12

சித்தசுத்தி யொன்றே முத்திக் கேதுவாகும்
செயல்களை மனத்துட் பதியாமல்
நித்தமும் பற்றின்றிச் செய்திடக் கருமந்தான்
நிலையாத கலுந்தா மதியாமல். 13

சந்த்ர மணியம்மைத் தேவிக் குரிமையாய்த்
தாம்அப் பணிவிடை யாற்றிவந்து
அந்தியத்தில் கங்கைக்கரையில் வைத்தம்மையின்
அடிமல ரிணைப்போற்றி செய்தாராம். 14

# 12

## திருத்தொண்டர் குழாம்

கேசவ சந்திர சேனர்தம் கீர்த்தியைக்
கேள்வி யுற்றஸ்ரீ ராமகிருஷ்ணர்
நேசங்கொண் டுதாமாக வவரில்லம்
நெருங்கிச்சென் றேகண்டு பேசிவந்தார். 1

அன்றிருந்து பிரமசமாஜத் தலைவரும்
அடிக்கடி சீட ருடனேவந்து
நன்றுகண்டு ராமகிருஷ்ணர் மீதன்பு
நண்ணி யதிபக்தி பண்ணினராம். 2

நிர்க்குண நிராகார மாயினும் கடவுள்
சகுண சாகாரமாயு மிருப்பார்
பக்குவத்தை ராமகிருஷ்ணர் பாற்றெரிந்து
பரவச மானாருஞ் சந்திரசேனர். 3

பிம்பாராதனை கூடாதென் றஅவர்
பேதைமையும் நீங்கி விட்டதுவாம்
நம்பன்உருவவர் ஞாபக மூட்டிடும்
ஞாயம்போலவேதான் விக்கிரகம். 4

தான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
தானும்என் றதகை மையினராய்
வான்போன்று தம்மைக்காணும்பக்குவர்க்கு
வரையாது போதித் தடிமைகொண்டார். 5

பறவைகள் கொத்திய பழமொப்பர் இல்லறம்
படிந்தவர் துறவுடை மற்றவரோ
மறவாமல் இறைவனுக் கற்புதமாகிய
மாசிலாத் தீங்கனிக் கொத்தவராம். 6

துறவறத் துக்கெனத் தேர்ந்தாருள்முதல்வர்
தூய விவேகா னந்தராகும்
திறம்பாத மூன்றுவ தாண்டிலே ஜோதியில்
திளைத்தவ ராம்அருள் பழுத்தவராம். 7

இல்லறச் சீடரிலக் கணத் தைநன்கு
இவரது வாழ்க்கையிற் காட்டியுள்ளார்
இல்லறத் திற்றேய்ந்த பேர்களுஞ் சீடராய்
ஏகிப் பயன்பெற்றோர் தாமுமுள்ளார். 8

துர்க்க சரணநாக ரென்பார் ஒருவர்தாம்
தூய்மை யுடையவ ராயிருந்தார்
நற்கதி யாலிவர் நற்றிருக் கூட்டமும்
நாள டைவிற்பல மாகியதாம். 9

பெண்மக்க ளுட்பலர் சீடராயிருந்து
பெரும் பேறெய்திய வகையும்உண்டு
கண்மணி யான அகோர மணிதேவி
கண்டனள் பால கிருஷ்ணன் வடிவை. 10

தாழ்ச்சியின் றிக் கண்ணன் குழந்தை யம்மைமுன்
தவழ்ந்து விளையாடி அன்னுளுக்குக்
காட்சி யளித்ததோர் மாட்சிமை தன்னைக்
கழறுவதும் என்றால் ஆகுவதோ ? 11

## 13

### மகாசமாதி

ஆயிரத் தெண்ணூற்றெண் பத்தைந் தாமாண்டில்
ஐயன்ஸ்ரீ ராம கிருஷ்ணருக்குத்
தாயின தருளாற் றிருமேனி சிறிது
தளரத் தொடங்கிய தாமவர்க்கு.

வாய்ந்த துறவிகள் இல்லற வாசிகள்
வனிதைய ராம்பல சீடர்களும்
மாய்ந்திடு வாரோவென் றைய முற்றுப்பல
வைத்தியரைக் கொண்டு பார்த்து வந்தார். 2

சாரதா தேவியும் உடனிருந் தவருக்குச்
சார்ந்த பணிவிடை யாற்றிவந்தார்
வேறதாம் காசிப்பூர் ஷ்யாம்புகூரிற் கொண்டு
வியாதியைத் தீர்க்க விரைந்தார்கள். 3

ஆயினும் அன்னவர் நோய்தீர வில்லையாம்
அம்மை திருவருள் யாரறிவார்
சேயர் பன்னிருவர் மீதன்பு தாம்கொண்டு
சீரிய சந்யாசம் தந்தாராம். 4

பாரில் நரேந்திரர் தமக்குநிர் விகற்பத்தைப்
பணித்தே யுலகி லருட்செல்வத்தை
நேரிற் பரப்பிடு மாறுப தேசித்தே
நித்தியானந் தத்தினி லாழ்ந்தாராம். 5

ஆயிரத் தெண்ணூற்றெண் பத்தாறு மாண்டினில்
ஆகஸ்டு மாதம் பதினாறில்
ஆயி திருவரு ளாலே சோம வாரத்
தன்றதி காலையி லேபகவான். 6

ஊனுடல் நீத்துத் தமது யதார்த்த
ரூபமாம் சச்சிதா னந்தத்திலே
தானுற ஆழ்ந்து மகா சமாதி கொண்ட
தன்மையைப் பாடுவோம் தோழிகளே. 7

இராமாவ தாரமும் கிருஷ்ணாவ தாரமும்
எடுத்த புருஷனே எழுந்தருளி
இராம கிருஷ்ணராக வந்தவ ராமென்ற
ஞாயத்தைக் கேளுங்கள் தோழிகளே. 8

இருநூற் றைம்பது வருடங் கழிந்தபின்
இப்பாரத நாட்டின் வடமேற்கில்
மறுமுறையு மவதாரஞ் செய்வதாக
மலர்ந்தருளினர் திருவாக்கில். 9

மனிதரோ தேவரோ யாமறியோ மிந்த
மாயத்தைப் பாடுவோம் தோழிகளே
கனிவுடனே யவரருளையே நாடிநாம்
கதிபெறப் பாடுவோம் தோழிகளே. 10

ஓம் தத்ஸத்.

THE MADURA TAMIL SANGAM